வெ.எண்.24 நாள்:12.01.2021

## கரூர் மாவட்டம்

# தோட்டக்கலை பயிர்சாகுபடி செய்யும் விவசாயிகள் சாதனையாளர் விருதுகள் பெற விண்ணப்பிக்கலாம் – என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு மலர்விழி,.இ.ஆ.ப. அவர்கள் தகவல்

கரூர் தோட்டக்கலைத்துறையின் மூலம் சிறந்த தோட்டக்கலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் விருதுகள் பெற விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார். விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தோட்டக்கலைப் பயிர்கள் முக்கியபங்கு வகிக்கின்றன. காய்கறிகள், பழங்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் ஈடுபாடு தற்சமயம் அதிகரித்து வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தோட்டக்கலைப் பயிர்கள் சிறந்த முறையில் தொழில்நுட்ப வசதிகளை கையாண்டு சாகுபடி செய்து வரும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசு வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் தலா 10 சாதனையாளர் விருதுகளை விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## விருதுகள் மற்றும் தகுதிகள்

காய்கறிகள் சாகுபடியில் சாதனையாளர் விருது, பழங்கள் சாகுபடியில் சாதனையாளர் விருது, சுவை தாளிதப்பயிர்கள் சாகுபடியில் சாதனையாளர் விருது, மூலிகை, வாசனை திரவிய பயிர்கள் சாகுபடியில் சாதனையாளர் விருது, மலைப்பயிர்கள் சாகுபடியில் சாதனையாளர் விருது, மலர் சாகுபடியில் சாதனையாளர் விருது ஆகிய விருதுகளுக்கு பாரம்பரிய, வீரிய ரகங்கள், ஒட்டு ரகங்கள், நவீன தொழில்நுட்பங்கள், சிறப்பான பயிர் பராமரிப்பு, நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த உரம் மற்றும் பூச்சி நோய் மேலாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், மழை நீர் சேகரிப்பு, அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள், சிறப்பான சந்தை மேலாண்மை செய்பவர்கள் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். நுண்ணீர் பாசன தொழில்நுட்பத்திற்கான சாதனையாளர் விருது, நீர் மேலாண்மை, நீர் வழி உரம், சரியான பயிர் இடைவெளி, களை மேலாண்மை, மழை நீர் சேகரிப்பு, நுண்ணீர் பாசன அமைப்பு பராமரிப்பு போன்ற இனங்களை சிறப்பாக பயன்படுத்தி அதிக மகசூல் அடைந்தவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். உயர் தொழில்நுட்ப சாகுபடி, பாதுகாக்கப்பட்ட சாகுபடிக்கான சாதனையாளர் விருதுக்கு பாதுகாக்கப்பட்ட சாகுபடி, நீர் மேலாண்மை, வருடம் முழுவதும் சாகுபடி, களை மேலாண்மை, பூச்சி நோய் மேலாண்மை, தரமான பொருட்கள் உற்பத்தி, ஒருங்கிணைந்த பண்ணையம், பண்ணையம் இயந்திரமாக்கல், அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்பங்கள், சந்தை மேலாண்மை, திறன் மேம்பாடு போன்றவற்றின் மூலம் அதிக மகசூல்

அடைந்தவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். அங்கக, இயற்கை விவசாயத்திற்கான சாதனையாளர் விருதுக்கு அங்கக சாகுபடி, ஒருங்கிணைந்த பண்ணையம், மண்புழு உரக்கூடம், தேனி வளர்ப்பு, மழை நீர் சேகரிப்பு, அங்கக சாகுபடியை பதிவு செய்து சான்று பெறுதல், உர மேலாண்மை மற்றும் சிறப்பான சந்தை மேலாண்மை போன்றவற்றின் மூலம் அதிக வருவாய் மற்றும் தரமான பொருட்கள் உற்பத்தி செய்தவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

புதிய, தனித்துவமிக்க மாவட்டத்திற்கே சிறப்புக்குரிய தோட்டக்கலைப் பயிர் சாகுபடிக்கான சாதனையாளர் விருதுக்கு புதிய அல்லது சிறப்புமிக்க பயிர்களை அறிமுகப்படுத்துதல், சிறப்பாக நீர், உரம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, பயிர் சாகுபடி முறைகள், ஒருங்கிணைந்த பண்ணையம், அறுவடை பின்செய் நேர்த்தி மற்றும் சிறப்பான சந்தை மேலாண்மை ஆகியவற்றின் மூலம் அதிக மகசூல் மற்றும் வருவாய் ஈட்டியவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். தமிழகத்தில் வசிக்கும், சொந்தமாக நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகளும் இதில் போட்டியிடலாம். ஒரு விவசாயி வட்டார அளவில் ஒரு விருதுக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம். வட்டார அளவில் விருது பெற்ற விவசாயிகளில் இருந்து மாவட்ட விருதுக்கும் மற்றும் மாவட்ட அளவில் விருது பெற்ற விவசாயிகளில் இருந்து மாநில விருதுக்கும் விவசாயிகளை குழு தேர்வு செய்யும். இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலைத்துறையின் இணையதளம் www.tnhorticulture.tn.gov.in உள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து, அதனுடன் விண்ணப்பக் கட்டணமாக ரூ.100 செலுத்தி, ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலை விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, தங்களின் தொழில்நுட்ப சாதனைகளை வெளி கொணர்ந்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**